1972 ஆகஸ்ட் 18]

Ayigoundanpalayam pond

*172. Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for not repairing the Ayigoundanpalayam pond in Uthukuli firka, Erode, even though it has breached three times?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அயிகொண்டான் பாளையம் குட்டையில் இதுவரை உடைப்பு எதும் ஏற்படவில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்

*173. வினா—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் கூடுதல் பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்புகள் தயாரித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் பத்து புதிய வழித்தடங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மதுரை நகரத்தில் இனிமேல் புதிதாக வேறு யாருக்கும் அனுமதி கொடுக்காமல் புதிதாக, அதிகமாக பஸ்களை யெல்லாம் பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் மூலமாக விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கூடுமான வரையில் மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில் கூடுதலான வழித்தடங்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத் தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இப்போது பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மதுரை நகரத்தில் ஓடக்கூடிய பஸ்கள் பூராவும் பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் உடமையாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. டி.வி.எஸ்.-இலிருந்து 340 பஸ்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு மேலும் 40 பஸ்கள் அளவிற்குக் கூடுதலாக ஆக்கியிருக்கிறோம். மதுரை நகரில் ஓடும் பஸ் முழுவதையும் எடுக்க இப்போது ஒன்றும் உத்தேசமில்லை. ஏனென்றால் விரைவிலே எல்லாப் பேருந்துகளையும் மேற்கொள்ளக் கூடிய திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கொப்ப வரவிருக்கிற காரணத்தினால் மதுரை நகருக்காகத் தனியாக ஒரு திட்டம் அவசியமில்லையென்று கருதுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இருக்கிற மதுரை மாவட்டத்திலும் பக்கத்தில் இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திலும் புதிதாக வருகிற வழித்தடங்களையெல்லாம் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் உத்தேசம் இப்போதில்லை. ஆனால் படிப்படியாக நாட்டுடைமையாக்குவது செயல் முறையில் இருக்கிற காரணத்தினால் புதிய வழித்தடங்களைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

லாரிகளுக்குச் சீரான கட்டணம்

* 174. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரிகளில் சாமான்கள் ஏற்றிச் செல்வதற்கான கட்டணங்கள் மாநிலம் முழுவதும் ஒரே சீராக இருக்குமாறு ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, லாரிகளில் சாமான்களை ஏற்றிச்செல்வதற்கு கட்டணமாக டன் ஒன்றுக்கு சென்னையிலிருந்து மாயூரத்திற்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரையிலும், அதைப்போல் கும்பகோணத்திற்கும் லாரிகளுக்குத் தக்கபடியும் இடங்களுக்கு ஏற்றபடியும், நேரத்திற்கு ஏற்றபடியும் வசூலிக்